Original Suit No.171/2019 நாள்: 11.03.2024

**<u>வா.சா.3 செல்வராஜ் அவர்களின் 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலம் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது. 1919 வருட ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள A அட்டவனை சொத்தை பொருத்து நான் ஆவணத்தை பார்த்ததில்லை. மேற்படி ஆவணத்தை பற்றி எனக்கு யாரும் சொல்லவில்லை. அது காலி இடம் என்றால் சரிதான். என்னுடைய பிரமான வாக்குமூலத்தில் வழக்கு சொத்து பொருத்து A, B, C, D, E அட்டவணை என்று குறிப்பிட்டு இருக்கிறேன் அவற்றை பொருத்து நான் எந்த ஆவணங்களையும் பார்க்கவில்லை. இடத்தை பார்த்து சொல்கிறேன். என் தாயார் இருக்கிறார். அவர் வயது 83. என்னைவிட அவருக்கு தாவா சொத்துக்களை பொருத்து யார் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்று நன்கு தெரியும். வழக்கை பொருத்து அம்மையப்பன் யார் யார் மீது தாக்கல் செய்து இருக்கிறார் என்பதற்கு நான் வழக்குரையை பார்க்கவில்லை. நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் மாமர தோட்டம் என்று குறிப்பிட்டுள்ள பகுதி, தாவா சொத்தில் ஒரு மாமரம் இருக்கிறது அதை வைத்து நான் மாமர தோட்டம் என்று குறிப்பிட்டு இருந்தேன். அதே போல 1953ல் ஒரு குப்பண்ணக் கவுண்டர் குமாரர் நல்லியண்ண கவுண்டரிடம் இருந்து சோழியம்மாள் வாங்கியதாக கூறியிருக்கிறேன். அந்த ஆவணத்தையும் நான் நேரில் பார்க்கவில்லை. அதேபோல C செட்டியூல் பாதையை வாதி அம்மையப்பனின் தாயார் 1951 ஆண்டு வாங்கியதாக குறிப்பிட்டு இருக்கிறேன். அது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. ஆவணத்தையும் நான் பார்க்கவில்லை. அதே போல 1970 ஆண்டு மேற்படி அம்மையப்பனின்

சகோதரிகள் குடும்ப ஏற்பாட்டின் படி வாதி பெயருக்கு எழுதிக்கொடுத்து அது நடைமுறைக்கு வந்ததாக குறிப்பிட்டு இருக்கிறேன். அந்த பத்திரத்தை நான் நேரில் பார்க்கவில்லை. என் தாயாருக்கும் அதுபற்றி தெரியாது. பக்கத்து வீடு என்பதால் விசாரித்து தெரிந்து கொண்டேன். தாவா சர்வே எண்ணும் அதை சேர்ந்து பகுதிகளும் சுமார் 8 ஏக்கருக்கு மேலாக உள்ள நத்தம் வகை நிலங்களாகும். என் வீடும் நத்தம் நிலத்தில் உள்ளது. நான் சமீபத்தில் 2018 ல் தான் என் வீட்டிற்கு பட்டா வாங்கினேன். சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு மேற்படி நிலங்களை பிரித்து நத்தம் நில வரித் திட்டத்தின் கீழ் அளந்தார்கள் என்று எனக்கு தெரியாது. திட்டம் வந்தது தெரியும். நான் என் வீட்டை 1995 ல் கட்டினேன். அது கடன் வாங்கி கட்டப்பட்டது. அதற்காக வழக்கறிஞரிடம் கருத்துரை வாங்கினேனா என்று நினைவில்லை. பத்திரத்தை கொடுத்து தான் வங்கியில் கடன் வாங்கினேன். பட்டா கொடுக்கவில்லை. நான் குடியிருக்கும் வீட்டை 1992 ல் பெரிய மச்சு வீட்டு ராமசந்திரனும் அவரது சகோதரியும் எனக்கு கிரையம் எழுதி கொடுத்தனர். அது என் கைவசம் இருக்கிறது. சர்வே எண் அதில் உள்ளது. உட்பிரிவு நினைவில்லை. மேற்படி நில வரித் திட்டம் நான் கிரையம் பெறுவதற்கு சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பாக வந்து விட்டது. தற்போது எனக்கு வயது 61. நான் பிறந்து 6 மாதத்தில் இருந்தே போலியோவால் பாதிக்கப்பட்டுள்ளேன். அது முதல் நான் சக்கர நாற்காலி பயன்படுத்தி வருகிறேன். 40 வருடங்களாக டெக்ஸ்டைல் தொழில் செய்கிறேன். தாவா சொத்து காலி இடம் என்பதால் அதை நான் விலைக்கு வாங்குவதற்கு பிரியப்பட்டேன். ஏனென்றால் அது என் சொத்தை ஒட்டி வட புறத்தில் உள்ளது. வழக்கு பிரதிவாதிகளை நான் பார்த்ததில்லை. அவர்களை எனக்கு தெரியாது.

4ம் பிரதிவாதியின் தகப்பனார் எங்கள் ஊரில் இருந்து கர்நாடகா மாநிலம் பத்ராவதிக்கு சென்றாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் ஊரில் இருந்து நிறைய பேர் அங்கு சென்றார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மாடிப்படிகளில் என் வீல்சேர் வழியாக தான் வந்தேன். என்னை யாரும் தூக்கி வரவில்லை. வழக்கு சொத்துக்களை வாதி அபகரிக்க வேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்து இருக்கிறார் என்றும், வழக்கு சொத்தை நான் விலைக்கு வாங்க முயற்சித்தால் உண்மைகளை மறைத்து உண்மைக்கு மாறான வாக்குமூலத்தை வாதி கூறியப்படி தயார் செய்து தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

R KANAGARAJ
Digitally signed by R KANAGARAJ
Date: 2024.03.11 17:59:25 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.

The above Cross Examination is Adopted by D5 to D9.